**பேருவளை நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேருவளை நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள பேருவளை நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 3.5 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு அந்த சொத்துக்கள் பயன்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டில் பயன்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 3,365,000 பெறுமதியான சோலர் பனல் மற்றும் ரூபா 645,543 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மலசலகூட முறைமை என்பன 2021 ஆம் ஆண்டின் போது பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 352,639 | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நியமத்தின் 3.6 ஆம் பிரிவின் பிரகாரம் நடப்பாண்டு நிதிக்கூற்று தொகுதியில் நடப்பாண்டிற்கான சமர்ப்பிக்கப்பட்ட சகல பெறுமதிகளுக்காகவும் முன்னைய சமனாக்கக்கூடிய காலப்பகுதி தொடர்பாக சமப்படுத்தப்பட்ட தகவல்கள் நிறுவனத்தினால் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நியமத்தின் 3.27 ஆம் பிரிவின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது பின்வரும் பெறுமதிகள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| | • வருமானக்கூற்றின் பிரகாரம் ஆண்டின் மிகை ரூபா 50,168,142 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 50,212,567 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| | • ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 11,908,814 ஆக இருந்ததுடன் அப்பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் 133,490 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் வட்டி வருமானம் ரூபா 2,537,437 ஆக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அப்பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | நியமத்தின் 9.6 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான | | |

| | | | |
|---|---|---|---|
| | கையளித்தல்களை இனங்காணப்படாத மூலதன கையளித்தலின் கீழ் கணக்கீடு செய்து முன்கொண்டு செல்லப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறு | | |
| | • 2020 ஆம் ஆண்டின் போது மாகாண அபிவிருத்தி மானியத்தின் கீழ் சோலர் பனலிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 3,365,000 தொகை மற்றும் மலசலகூட முறைமைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 645,543 தொகையான மொத்த வருமானம் 2020 ஆம் ஆண்டின் போது மூலதனமாக்கி வருமானமாக இனங்காணல். | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | • 2020 ஆம் ஆண்டின் போது வடிகாண் முறைமையை நிர்மாணிப்பதற்காக கடல்சார் சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 497,792 தொகை மூலதனமாக்கப்பட்டு வருமானமாக இனங்காணப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| | • 2021 ஆம் ஆண்டின் போது மாகாண அபிவிருத்தி மானியத்தின் கீழ் ஆயுர்வேத கட்டிடத்திற்காக கிடைத்த ரூபா 1,917,578 மற்றும் ராசிக் மரிக்கார் மாவத்தையில் வடிகாண் முறைமை நிர்மாணிப்பதற்காக கிடைத்த ரூபா 935,661 தொகை மூலதனமாக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டின் வருமானமாக கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | நியமத்தின் 9.10 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கம் தவிர ஏனைய தரப்பினர்களிடமிருந்து கிடைக்கின்ற கையளித்தல்கள் அந்த ஆண்டின் வருமானமாக | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| இனங்காணப்பட வேண்டிய போதிலும் 2021 யூன் 12 ஆந் திகதி நன்கொடையாக கிடைக்கப்பெற்ற பொருட்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | | |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கணனி மென்பொருளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 137,840 தொகை கணனி மென்பொருள் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அப்பெறுமதி கணனியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 இன் நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும். | சரியாக சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நூலக புத்தகங்களுக்காக பெறுமானத்தேய்வு ஒதுக்கப்படாமையினால் ஆண்டின் மிகை ரூபா 401,481 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நூலக புத்தக இருப்பின் பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்படாமையால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 4,108,534 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2015 ஆம் ஆண்டு முதல் 2020 வரையான காலப்பகுதிக்குரிய 07 ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 190,084 தொகையான சம்பளம் ஆண்டின் செலவினத்தில் உள்ளடக்கப்பட்டமையால் ஆண்டின் இலாபம் அப் பெறுமானத்தினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்களுக்குரிய கிரயத்தை மூலதனமாக்கும் போது அந்த சொத்துக்களின் உள்ளபடியான பெறுமதி மூலதனமாக்கப்படாமல் உடன்படிக்கை செய்யப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,878,300 சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்ட போதும் அந்த சொத்துக்களின் இறுதி கொடுப்பனவின் பிரகாரம் உள்ளபடியான கிரயம் ரூபா 6,946,170 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டமையால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்களின் கிரயம் ரூபா 1,932,130 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த சொத்துக்கள் வருடமொன்றிற்கு 10 சதவீதம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் உரிய பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 193,213 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 223,850 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | 2021 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் ரூபா 194,000 பெறுமதியான வாகனமொன்று பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வாகனமொன்றாக இனங்காணப்பட்டிருந்ததுடன் இதன் பெறுமதி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் | 2022 இன் நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதி ரூபா 194,000 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆயுர்வேத களஞ்சிய பொருள் இருப்பு ரூபா 76,800 ஆக இருந்ததுடன் இறுதி இருப்பு கணப்பீட்டின் போது அப்பெறுமதி கவனத்தில் கொள்ளப்படாமையால் இறுதி இருப்பு ரூபா 76,800 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | 2021 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் அல்லாத செலவினங்களுக்காக அரசாங்கத்திலிருந்து மானியமாக ரூபா 4,348,661 கிடைத்திருந்ததுடன் வருமானத்தை கணிப்பிடும் போது முன்னைய ஆண்டுகளின் போது மீண்டெழும் அல்லாத செலவினங்களுக்காக கிடைக்கப்பெற்ற மூலதன மானியங்களில் ஆண்டிற்குரிய செலவினமாக அதாவது கால கழிவாக இனங்காணப்பட்ட பகுதி ஆண்டில் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக ஆண்டில் கிடைத்த வருமானம் ரூபா 4,348,661 தொகை வருமானத்திற்கு எடுப்பதற்கு ஆண்டின் மிகை அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | 2021 ஆம் ஆண்டிற்காக கிடைக்கப்பெற்ற மூலதன மானியங்களின் பெறுமதி, ஏனைய விரிவான வருமானத்தின் கீழ், கிடைக்கப்பெற்ற மூலதன செலவினங்களின் மானியமாக குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 4,348,661 தொகை அவ்வாறே பதியப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,168,142 ஆக

இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,309,609 ஆக இருந்தது.

## 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த ஆதனவரி நிலுவை ரூபா 18,471,762 தொகைக்கிடையே ஆதனவரி நலனாளிகள் பன்னிரெண்டு பேர்களுக்கு ரூபா 998,076 தொகை 02 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான காலம் கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆகஸ்ட் 01 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 265,992 தொகை அறவிடப்பட்டுள்ளது. | ஆதனவரியை குறித்துரைத்த ஆண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வாடகை ரூபா 5,441,492 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 4,505,914 அதாவது 83 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | ரூபா 146,260 தொகையான வாடகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சகல நிலுவை வாடகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் iv ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் வருமான சேகரித்தலை வலையமைப்பின் ஊடாக மேற்கொள்வதற்கு 2020 யூன் மாதம் ரூபா 4,350,000 செலவில் 10 துணைப் பாகங்களுக்காக மென்பொருளை பெற்றுக் கொள்வதற்குரிய சாத்தியவள ஆய்வு மேற்கொண்டு இந்த மென்பொருளை சபைக்காக எவ்வளவு தூரம் பயனுள்ளதாக பயன்படுத்த முடியுமாக உள்ளது என சபைக்காக உள்ளபடியாக தேவையான மென்பொருள் எது என்பது தொடர்பான ஆய்வு இன்றி மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் 2021 திசெம்பர் வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | தேவையினை இனங்கண்டு கொள்வனவு செய்தல் வேண்டும். |